**Date : 12.03.2026**

**SC.No. : 65/2016**

**PW : 10**

**Name : மருத்துவர். ஸ்ரீ ஹரி**

அரசுதரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சிக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

நான் தற்போது திருநெல்வேலி தாழையூத்து தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தில் மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 24.11.2015 அன்று திருப்புவனம் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரியும் போது 15 வயது மதிக்கத்தக்க செல்வகணபதி என்பவருக்கு சிகிச்சை அளித்து நான் வழங்கிய காயச்சான்றிதழ் தற்போது என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது ஏற்கனவே அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 33 வயது மதிக்கத்தக்க ஜெயமணி என்பவருக்கு சிகிச்சை அளித்து நான் வழங்கிய காயச்சான்றிதழ் தற்போது என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது ஏற்கனவே அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் வழங்கிய காயச்சான்றிதழ் அனைத்துமே மதுரை அரசு மருத்துவமனை மருத்துவர் வழங்கிய காயச்சான்றின் அடிப்படையில் நான் பார்வையிட்டு நான் மறு காயச்சான்றிதழ் வழங்கினேன்.

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.12 17:49:07 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**